செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. ‘வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15
ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௨] யாழ்ப்பாணம்:- விரோதிகிருதுஞூ சித்திரை மீ ௨௧உ வெள்ளிக்கிழமை (14-5-1971) [இல-கூ

சைவ நற் சிந்தனை — 1

## இறைவன் எங்குளான்?

[ திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் ]
( அண்மையில் நிகழ்த்திய வானொலிப் பேச்சு )

நாயன்மார்களுள் காலத்தால் மிக முந்தியவரான காரைக்காலம்மையார் தமது பாடலொன்றில் இறைவன் எங்குளான் எனுங் கேள்வியை எழுப்பியுள்ளார். அதற்கு விடையாக மற்றையோர் கூறுவனவற்றை முதலில் கூறுகின்றார். சிலர் இறைவன் வானத்தில் உள்ளான் என்பர். சிலர் இந்திரலோகத்தில் உள்ளானென்பர். இக் கூற்றுக்களைத் தாம் ஏற்காதபடியால், அவர்கள் கூறுவனவற்றைக் கூறட்டும் என்கிறார்.

“வானத்தான் என்பாரும் என்க;
மற்றும் உம்பர் கோன்
தானத்தான் என்பாரும் என்க”

இனி, இறைவனை “ஞானத்தான்” என்றும், “நஞ்சத்தாலிருண்ட மெய்யொளி சேர் கண்டத்தான்” என்றும் வர்ணிக்கிறார். இறைவனை அன்பு வடிவினன், அருள் வடிவினன் எனப் பலவாகக் கூறுவர். இங்கு எல்லாவற்றுக்கும் மேலான ஞான சொரூபியாகக் காண்கிறார். மேலும் இறைவனின் திருநீல கண்டத்தைக் குறிப்பிடுகிறார். இங்கு இறைவன் தேவர்க்காக ஆற்றிய அருட்செயலை ஞாபகப்படுத்துகிறார்.

மேலே வர்ணிக்கப்பட்ட இறைவனை “என் நெஞ்சத்தான் என்பன் யான்” எனக் கூறுகின்றார். இறைவனைத் தம்முள் கண்டபடியாலேயே இவ்வளவு உறுதியாகக் கூறுகின்றார். இனி, அம்மையாரின் முழுப் பாடலையுங் காண்போமாக.

வானத்தான் என்பாரும் என்க;
மற்றும்பர் கோன்
தானத்தான் என்பாரும்
தான்என்க — ஞானத்தான்
முன்னெஞ்சத்தா லிருண்ட
மெய்யொளி சேர்
கண்டத்தான்
என் நெஞ்சத்தான் என்பன்
யான்.

இக் கருத்தையே திருநாவுக்கரசரும், திருவங்கமாலை இறுதிப் பாட்டில் கூறுகின்றார். முதல் ஒன்பது பாக்களில் இறைவனுடைய உருவத் திருமேனியை வணங்குவதையும் ஆலய வழிபாடு செய்வதையும் ஆக்கையெடுத்ததன் பயனெனக் கூறுகின்றார்; இறுதிப் பாட்டில திருமாலும் நான்முகனும் தேடிக் காண முடியாத பொருளை தம்முள்ளே தேடிக்கண்டு கொண்டு விட்டதாகக் கூறுகின்றார்.

“தேடிக் கண்டு கொண்டேன்
— திருமாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் -தேவனை
என்னுள்ளே தேடிக் கண்டு
கொண்டேன்”

தேவர்களுக் கரியவனான இறைவன் அடியார்க்கெளியன் ஆகின்றான் என்பதை மணிவாசகரும் பின் வருமாறு கூறுகிறார்.

வான நாடரும் அறியொணாதநீ,
மறையில் ஈறும் முன்
தொடரொணாத நீ
ஏனை நாடரும் தெரியொணாதநீ
என்னை இன்னிதாய்
ஆண்டுகொண்டவா.

உபநிடதங்களும் இறைவனை இதயக் குகையில் காண வேண்டுமென்கின்றன. இதய குகையில இறைவனைக் காணுதலைத் தகர வித்தையெனக் கூறுகின்றன. சாந்தோக்கிய உபநிடதம் பின்வருமாறு கூறுகிறது. “இனி இந்தப் பிரமபுரத்தில் (சரீரத்தில்) தாமரை போன்ற சின்னஞ் சிறு மாளிகையுண்டு. அதனுள் சிற்றம்பலம். அதில் உளது எதுவோ அதைத் தேடவேண்டும். ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டும்.

இந்தச் சிற்றம்பலத்தில் என்ன ஆராயக்கூடியதாகவிருக்கும் என்னும் கேள்விக்கு அதே உபநிடதத்தில் பின்வருமாறு விடை கொடுக்கப்பட்டிருக்கிறது.

“இவ் வாகாசம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியது இருதயத்திலுள்ள ஆகாசமும்; வானுலகமும் பூவுலகமும் இதனுள் அடங்கும். அக்கினியும், வாயுவும், சூரியனும், சந்திரனும், மின்னலும், நட்சத்திரங்களும் இன்னும் இங்கு எது இவனுக்கு உண்டோ, எதேது இல்லையோ, அதுவெல்லாம் இதனுளடங்கும்.”

சிற்றம்பலத்தினுள்ள பரம்பொருளை ஒருவன் அறிந்துவிட்டால், அவன் எல்லாம் அறிந்தவனாவான்.

ஆகவே, இறைவன் “உள்குவார் உள்ளத்தெல்லாம் உடனிருந்து அறிபவன்” “இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதுறைபவன்” என்னும் உண்மைகளை உணர்ந்து பெரு வாழ்வு பெறுவோமாக.

---

உ
திருச்சிற்றம்பலம்

நாளுமிகு பாடலோடு ஞானமிகு
நல்லமலர் வல்லவகையால்
தோளினொடு கைகுளிர
வேதொழும்
அவர்க்கருள்செய் சோதி
யிடமாம்
நீளவளர் சோலைதோறும்
நாளி பல
துன்றுகனி நின்றதுதிர
வாளைகுதி கொள்ளமதுநாறமலர்
விரியும்வயல் வைகாவிலே.

திருச்சிற்றம்பலம்
— திருஞானசம்பந்தசுவாமிகள்.

### வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் 1ம் திகதி (15-5-71) சனிக்கிழமை துவஜாரோகணமாகி, உற்சவங்கள் நடைபெறும். 9-ம் திகதி (23-5-71) ஞயிற்றுக்கிழமை பஞ்சமுக விநாயகர் இரதோற்சவமும், 10-ம் திகதி (24-5-71) திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும், 11ம் திகதி (25-5-71) செவ்வாய்க்கிழமை பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

விழாக் காலங்களில் கூட்டுப்பிரார்த்தனை, கதாப்பிரசங்கம், உபந்நியசம் ஆதியனவும் இடம்பெறவுள்ளன.

### மதுரை சித்தாச்சிரமத் தலைவர்

மதுரை சித்தாச்சிரமத் தலைவர் ஸ்ரீ நரசிம்மராவ் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகின்றனர். இவர் உலக யாத்திரையை மேற்கொண்டு, அமெரிக்க, ஜப்பான் சிங்கப்பூர், மலேஷியா முதலான நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர். சித்தாச்சிரமம் தமிழ் நாட்டில் மிகப் பழமை வாய்ந்த தாபனமாகும். உலகின் பல பகுதிகளிலிருந்து சாதுக்களும்சந்நியாசிகளும் விஜயம் செய்திருக்கின்றார்கள்.

---

## சிலப்பதிகாரக் காப்பியக் கோயில் ஓர் எழிலோவியம்

திரு. செ. வைத்தியலிங்கன் எம். ஏ., எம். லிட்.
தமிழ் விரிவுரையாளர் (கலைத்துறை) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

(முன் வளர்ச்சி — 3)

இனிய மொழியையுடைமையால் தேனை ஒத்தவளாகக் கண்ணகி அமைகின்றாள். தேனானது மலரில் பிறந்து இனிமை, பிணி தீர்த்தல் நெடுங்காலம் கெடாமை, ஊட்டம் முதலிய பண்புகளைத் தன்னைக் கொண்டார்க்குத் தரும் நன்பொருள். கண்ணகியின் வாய்ச்சொல்லும் மனமாகிய மலரில் தோன்றி இத்தகைய பண்புகளைத் தன்னைக் கொண்ட கோவலனுக்கு அளிக்கும் பான்மையது. எனவே, கண்ணகியிடம் கோவலன் தான் கொண்ட அநுபவத்தைச் சொல்லில் உருவமைத்துக் ‘தேனே’ என இயம்பிக் களிக்கின்றான். இவை ‘இடக்கர்’ என அடியார்க்கு நல்லார்க்குத் தோற்றுகின்றன. இவற்றின் நுட்பமெல்லாம் திருக்குறள் (1101) பரிமேலழகருரையில் ‘வட நூலார் இடக்கர்ப் பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டு அடக்கிக் கூறப்பட்டன’ என வரும் பகுதியால் தெளிவாகும்.

**அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே:**

பெறுதற்கரிய பாவையாகவும் அமுதமாகவும் கண்

( வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

---

## சுமார் 500 வருடக் கந்தபுராண ஏடு தலத்தில் பேணப்பட்டுள்ளது

மீசாலை திருநீலகண்ட வேள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலில் தொடர்ந்து பல்லாண்டு காலமாகக் கந்தபுராணம் வாசித்துப் பல அறிஞர்களால் பயன் கூறப்பட்டு வருகின்றது

இவ்வருடப் படிப்பு 12-5-71ல் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது. கல்வயலூர் பிரமஸ்ரீ. சிதம்பரநாதக் குருக்கள் அபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

மீசாலை பக்திநெறிக் கழகக் கௌரவ காரியதரிசி கு. வி. மகாலிங்கம் வாலிபர்களையும் புராணப் படிப்பில் ஈடுபடுத்தி ஊக்கமளித்து வாழ்வைநல் வழியீட்ட பயிற்சி வகுப்பையும் வித்துவான்கள் மூலம் நடத்த ஆலயத்தில் ஒழுங்கு செய்துள்ளார்.

கந்தபுராணம் படிக்க வரும் வாலிபர்கள் சமய தீட்சைபெறவும் தலக் குருவுடன் ஒழுங்கு செய்துள்ளார்.

3 மாதங்கள் வரை இப்படிப்பு தினமும் நடைபெறும். பல பெண்களும், ஆண்களும் விரதமிருந்து சங்கற்பம் செய்துள்ளார்கள்.

(ந. நீ.)

---

### விவேகானந்த சபை

கொழும்பு விவேகானந்த சபையின் 64-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சபைமண்டபத்தில் 17-5-71 காலை நிகழவிருக்கிறது.

### விசேட விரிவுரையாளர்

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழக விசேட விரிவுரையாளராக டாக்டர் க. தருமலிங்கம் அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றுள்ளனர். இவர் இதற்கு முன்பு லண்டன் மலேஷியாச் சர்வகலாசாலைகளில் விரிவுரையாளராகக் கடமைபுரிந்துள்ளனர்.

### புதிய அச்சகம்

பரீட்சை இலாகாவினுல் புதிதாக ஓர் அச்சகம் நிறுவப்பட்டுள்ளது. பரீட்சைகளுக்குரிய வினுத்தாள்களை அச்சிடும் பணி இனி இங்கு நிகழுமெனத் தெரிகிறது.

### அச்சுவேலி தொழிற் பேட்டை

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்பும் உள்ளூர் கைத்தொழிலாளர்களை இம் மாதம் 28-ம் தேதிக்கு முன்னர் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

THE SAIVAPRAKSA PRESS.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஞூ சித்திரை மீ ௩௧-௨ வெள்ளிக்கிழமை [1971]

## இளைஞர்களுக்குச் சான்றோர் வழிகாட்டவேண்டும்

இந் நாட்களில் பாடசாலைகளுக்கு ஆசிரியர் செல்கின்றார்கள். மாணவர்கள் செல்வதில்லை நாட்டில் கலவரங்கள் ஓர் அளவுக்கு அடங்கி சமாதானமான சூழ்நிலை ஏற்பட்டவுடன் பாடசாலைகள் வழமைபோலக் கடமையாற்றத் தொடங்கும். இப்பொழுது நாட்டில் நிகழும் கோரமான செயல்களுக்கு பல இளைஞர்களே முக்கிய காரணமாவர். அவர்களை அறநெறியில் வாழவழிகாட்டாமை முதியோர்களின் தவறு. அதன் காரணமாக அவர்களை வழி நடத்த தீயசக்திகள் சேர்ந்துள்ளன. படிகம் சென்னிறமான பொருளைச் சேர்ந்தால் அதுவும் சென்னிறமாகவிருக்கும். பச்சை நிறமான பொருளைச் சேர்ந்தால் அதுவும் பச்சை நிறமாகவிருக்கும். அதேபோல் ஆன்மாவும நல்லவர்களைச் சேர்ந்தால் நல்லதாகவிருக்கும். தீயவர்களைச் சேர்ந்தால் தீயதாகவிருக்கும். மாணவர்களை நல்லவர்களாக்குவதற்கு சான்றோர்களுடைய தொடர்பை உண்டாக்குவதே முக்கியமாகும்.

நமது நாட்டின் பிரதம மந்திரியவர்கள் இவ்வருட வெசாக் விழா வழமைபோல நடைபெற இயலாத நிலைமையைக் குறித்துத் தமது வெசாக் தினச் செய்தியில் வருத்தம் தெரிவித்துள்ளார்கள். மக்களை புத்தர்பெருமானுடைய அரிய உபதேசங்களைப் பின்பற்றுமாறும் பிள்ளைகளை அவருடைய உபதேசங்களைக் கற்று அவற்றின்படி ஒழுகத் தூண்டவேண்டுமெனவும் பெற்றோர்களையும் முதியோர்களையும் கேட்டுக் கொண்டார். "எல்லா உயிர்க்கும் அன்பாயிரு. அகிம்சையே மேலான தருமம். ஆசையே துன்பத்துக்குக் காரணம்; ஆசையின்மையே பேரின்பத்துக்குக் காரணம்". இவைபோன்ற பொன்மொழிகளை மக்கள் மறந்து வாழ்வதே துன்பங்களுக்கு ஏதுவாகும்.

கல்வியானது அறத்தை நல்கும். செல்வத்தையும் தரும். இன்பத்தையும் தரும். ஈற்றில் வீட்டின்பத்தையும் நல்கும். வெளியிடங்களில் நல்ல புகழையும் உண்டாக்கும். கவலை வந்தவிடத்து அதனை நீக்க உறுதுணையாக விருக்கும். ஆகையினால் சிற்றறிவும், சிறு தொழிலும் உடைய உயிருக்குக் கல்வியிலும் பார்க்க மேலான துணையில்லை.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் — உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

உத்தியோகம் பெறுதலை நோக்கமாக உடைய கல்வி வேறு. இச் செய்யுளாசிரியர் குமரகுருபர சுவாமிகள் காட்டுகின்ற கல்வி வேறு. உண்மையான கல்வியே பிள்ளைகளுக்கு ஊட்டப்படுதல் வேண்டும்.

உ

யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபை
நடாத்தும்

**சைவசித்தாந்தத் தேர்வுகள்**

இவ்வாண்டுச் சித்தாந்தப் பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர் தேர்வுகள் எதிர்வரும் ஆவணி மாதம் 24, 25, 26 ஆம் தினங்களில் (9, 10, 11-8-71) நிகழும்.

இத்தேர்வுகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் வைகாசி மாதம் 8-ம் நாள் (22-5-71) அல்லது அதற்கு முன் தேர்வுச் செயலாளரிடம் சேரத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும்.

தேர்வு விண்ணப்பங்கட்கும், ஏனைய விபரங்கட்கும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

தேர்வுச் செயலாளர்,
சைவபரிபாலன சபை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## சிலப்பதிகாரக் காப்பியக் கோயில் . . .

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

ணகி மதிக்கப்படுகிருள். காட்சியின் உயிர் மயக்குறுதலின் கொல்லியிற் பாவாய் என்றும், அழியு முயிரை இமைப்பில் தருதலின் ஆருயிர் மருந்தே என்றும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் விளக்கம் கூறுகிருர்.

யாரும் உலகில் பெறுதற்கரிய பாவை (சிலை) வடிவாக அஃதாவது, பத்தினித் தெய்வமாகப் பிற்காலத்தில் சிலையெடுக்கும் வாய்ப்பினைக் கண்ணகி பெறுகிருள்; இத்தகைய சிறப்பு நிகழ்ச்சியானது இளங்கோவடிகளின் முன் நோக்குக் கவிக் குறிப்பாகக் (Poetic suggestion) கோவலன் வாய் வழி அமைகின்றது.

கோவலன் கண்ணகியுடன் மகிழ்ந்து அளவளாவும் நேரத்தில், 'ஆருயிர் மருந்தே' எனக் கூறுதலை ஊன்றி நோக்குதல் வேண்டும். பொதுவாக, மருந்தானது உடல் பிணியைத் தீர்க்கவே பயன்படுவதாகும். ஆனல், 'உயிர் மருந்தே' அதிலும் 'ஆருயிர் மருந்தே' என்று வருமபோது ஏதோ சிந்திக்க வேண்டிய இடமாகிறது. மனைவிக்குத் தன் உயிரினும் கணவனது உயிர் 'ஆருயிர்' ஆகும். கற்புடைச் செல்வி கண்ணகிக்கு ஆருயிராய் நிற்பவள் கோவலன் அவன் உயிருக்குப் பிணியாகிய பழி (சிலம்பு திருடியதாகிய வீண் பழி) ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுதலால் ஏற்படுகிறது. அந்த வீண்பழியாகிய பிணியை எதிர்த்துப் போராடி நீக்கும் மருந்தாகக் கண்ணகி பிற்காலத்தில் விளங்க இருக்கின்ருள் இந்தப் பொருள் நுட்பம் கவிஞன் தன் முன் நோக்குக் குறிப்பாக அமைந்து இலக்கிய இன்பம் சுரக்கிறது.

**பெருங்குடி வணிகன் பெருமட மகளே:**

பெருமைக்குரிய குடித்தோன்றலும் வணிகனுமாய மாநாய்கனுக்குப் பெருமட மகளாகக் கண்ணகி அமைகின்ருள். நல்ல குலத்து நங்கை கண்ணகிக்குப் பெண்மைப் பண்புகளாகிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும நான்கும் பொருந்தியுள்ளன. என்ருலும், 'பெருமட மகளே' என்று தான் விளிக்கப் பெறுகின்ருள்; காரணம் சிந்தித்தற்குரியது தானே!

மதுரையிலே தேரா மன்னன் பாண்டியனுல் கோவலன் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்கிருன்; கேள்விப்படுகிருள் கண்ணகி; ஓடோடிச்சென்று வெட்டுண்ட கணவனை வேதனையோடு காண்கிருள். கணவன் மீளவும் உயிர்த்தெழுந்தவனுய் 'இருந்தைக்க' எனப் பணித்து மீண்டும் மாண்டு விடுகிருன். தன் ஒற்றைச் சிலம்பால் பழியொடு மாண்ட கணவனைத் தன் பிறிதொரு சிலம்பால் பழியினின்றும் விடுவிக்க வேண்டிய பெரும் பொறுப்பினை உணர்கிருள்; எரிதழலெனச் சீறிச் சினந்து பொங்கி நிற்கிருள். புகார்க் காண்டத்தே அஞ்சியொடுங்கி வளர்த்த நாணமும் பயிர்ப்பும் அவளிடத்தே அடங்கி ஒடுங்கிவிடுகின்றன; ஆறிய கற்பானது சீறிய கற்பாக வெடித்துவெளிப்பட்டதால்,

'மட்டார் குழலார்
பிறந்த பதிப் பிறந்தேன்
பட்டாங் கியானுமோர்
பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ
டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறு
வாய்நீ'

எனச் சாற்றித் துன்பம் சுமந்த உள்ளத்தோடு மதுமாநகரில் சுழன்ருேடித் திரிகிருள். இங்குக் கண்ணகியின் இளமை (மடம்) துடிதுடிப்புக் கொண்டிருத்தலைக் காண்கிருேம்; மேலும் கணவன் கட்டளையை நிறைவேற்ற 'மடம்' அஃதாவது, கொளுத்துக்கொண்டு கொண்டது விடாத பெண்ணியல்பினையும் காண்கின்றேம். எனவே நல்ல குலக் கொடியாகிய கண்ணகி, பெருமடமகளாவும் விளங்குகிருள் இத்தகைய நிகழ்ச்சிகளையெல்லாம் உளப்படுத்திக் கவிமுன் தன் முன்னுக்குக் குறிப்பாக இந்த இடம அமைந்துள்ளது சிந்தித்தற்குரியதாகும்.

"மலையிடைப் பிறவா
மணியே யென்கோ
அலையிடைப் பிறவா
அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா
இசையே யென்கோ"

இவையெல்லாம் கோவலன் கண்ணகியை ஆவலோடு அழைத்து மகிழும் இடங்களாகும்.

மலையிடைப் பிறக்கும் மணி குழையாமையின் அதிற் பிறவா மணியே யென்பேனே? அலையிடைப் பிறக்கும் அமிர்தத்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற் பிறவாத அமுதே யென்பேனே? யாழ் கண்ணுக்கு இன்னுதாகலின் அதனிடைப் பிறவாத இசையே யென்பேனே எனப் பொருள்நயம் காண்பார் அடியார்க்கு நல்லார்.

இந்தப் பகுதிக்கு ஒப்புமையாகக் கலித்தொகை (பாலை)யில்,

பலவுறு நறுஞ்சாந்தம்
படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும்
மலைக்கவைதாம் என்செய்யும்,
நினையுங்கால், நும்மகள்
நுமக்குமாங் கனையளே
சீர்கெழு வெண்முத்தம்
அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும்
நீர்க்கவைதாம் என்செய்யும்
ஏழ்புணர் இன்னிசை
முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும்
யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள்
நுமக்குமாங் கனையளே.'

எனும் வரிகளைச் சுட்டிக் காட்டிச் சந்தனம், வெண்முத்தம், யாழிசை ஆகியவை தாம் தோன்றிய இடத்திற்குப் பயன் கூட்டாமல் கொண்டநுபவிப் போர்க்கே பெரிதும் பயன் விளைவிக்கும்; அது போன்றே, பெண்ணும் தான் பிறந்த இடத்திற்குப் பயன்படாது புகுந்த இடத்திற்கே பெரிதும் பயன்பட்டுப் பெருமை காட்டுகிருள் என்று அறிஞர்கள் பொருள் நுட்பம் கூறுவர்; இதனுல் கண்ணகி மலைபடு மணியைப் போலவும், அலைபடு அமிழ்தத்தைப் போலவும், யாழ்படு இசையைப் போலவும் தன்னைக் கொண்டவர்க்கே, அஃதாவது; புகுந்த இடத்திற்கே பயன்படுகிருள் என்ற சிறப்புப் பொருண்மையையும் விளக்குவர். இவ்வழியே மேலும் சிந்திக்க வாய்ப்புளது.

சிலப்பதிகாரத்திலே, பரத்தமையால் சீர்கெட்ட கோவலனைக் கண்ணகியின் அறவழிப் பொறுமையானது உணரவைக்கிறது; அவனைத் திருத்தி உயர்வாழ்விற்கும் வழிவகுக்கின்றது. ஊழ்காரணமாகப் பழியொடுபட்ட அவனுக்காகக் கண்ணகி; மன்னன் முன் சென்று வழக்காடிப் பழி தீர்ந்த புகழினைப் பெற்றுத்தருகின்ருள்; வையத்து வாழ்வாங்கு வாழ்தலால் கிட்டுதற்குரிய வானுறை தெய்வநிலையும் கைகூடி வருகின்றது இதனுல், கண்ணகி தன்னைக் கொண்ட கணவனுக்கு மங்காப்புகழுடப்பு பெற்றுத்தந்து; தன் கற்பின் பெருமையையும் உயர்த்தி விடுகிருள்.

(வளரும்)

## நாவலர் நல்வாக்கு

முன் வளர்ச்சி—3

8. காலை வெய்யிற் காய்ந்தால் வியாதிகளெல்லாம் அணுகும்.

மாலை வெய்யிலிற் காய்ந்தால் வியாதிகள் அணுகாவாம்.

9. தோலிலே ஒளிபடுவது சரீரத்துக்கு ஆரோக்கியத்தை விளைவிக்கும்.

10. நிமிர்ந்த நிலையினலே சரீரத்தத்வங்கள் பலவும் செவ்வையாக இயங்கப்பெற்று அழகுடையனவாய் விளங்கும்.

பிள்ளைகள் தலையுந் தோள்களும் கூனிப்பழகும்படி ஒருபோதும் விடலாகாது

11. உரக்கப்பாடுவதினலும், வாசிப்பதினலும் சுவாசப்பைகள் தேறிப் பெலங்கொள்ளும்.

12. (அ) பகனித்திரையானது பதினெட்டுவித வாதரோகங்களை விளைவிப்பதறகு ஏதுவித்தாகும்.

(ஆ) பிற்காலத்தில் நித்திரை செய்வதினும் முற்பாகத்தில் நித்திரை செய்வதே ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்

(இ) விடியற்காலத்து நித்திரையை இயன்ற மட்டும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

13. சயனிக்குமிடத்து வடக்குத் திக்கல்லாத திக்கிலே தலைவைத்து இடக்கை கீழாகச் சயனித்தல் வேண்டும்.

14. (அ) நான்கு மாசத்துக்கொருதரம் பேதிமருந்து உட்கொள்ளல் வேண்டும்

(ஆ) ஆறு மாசத்துக்கு ஒருதரம் வமன மருந்து (வாந்தியெடுத்தற் பொருட்டு உட்கொள்ளும் மருந்து. சளி பித்தமிவற்றை வெளிப்படுத்தும்)

15. எண்ணெய் தேய்க்குமிடத்து, நாசிக்கு நன்நான்கு துளியும், காதுகளுக்கு அவ்வாறு துளியும் விட்டு, சிரசிலும் உடம்பிலும் கால்களிலும் சூடேடாமல் தேய்த்து ஊறச்செய்து, பின்பு சிகைக்காய், அரைப்புத் தேய்த்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும்

—:—

### பிழை திருத்தம்

7-5-71 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் வழக்கு இலக்கம் M B 10047 ஐக் கொண்ட காணி விற்பனவு விளம்பரத்தில் விற்பனவுத் தேதி 21-6-71 என்றிருப்பதை 12-6-71 எனத் திருத்தி வாசிக்கக் கோருகின்ருேம்.

## நாவலர் நல்வாக்கு

அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள் அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் தங்கோடை, காரைநகர் —வழக்காளி

வழ. இல: M B. 10535 எதிராக

(1) சின்னக்குட்டி சண்முகராசா கொட்டடி யாழ்ப்பாணம் தற்போது உண்ணாட்டு வருவாய் இலாக்கா (தவறுக்கிறை) கொழும்பு

(2) சின்னகுட்டி நடராசா கொட்டடி யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 10535-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் ஷூ ஆனி மீ 19-ம் திகதி (19-6-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 6000/-ம் 15-5-63 தொடக்கம் 4-11-70 வரைக்கும் ரூபா 5 000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 628-05 சதம்.

(கொடுக்கப்பட்டது ரூபா 500/—)

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை திருவலறத்திடலும் சிமான்றிடலும் உத்தரவுபெற்ற உலாந்தா ஏகாம்பரத்தால் தயாரிக்கப்பட்ட 738 ம் இலக்கப்படத்தில் 2ம் துண்டுக்காணியின் நெல் பரப்பு இரண்டும் (2) குளி ஆறும் (6) கிணறும் வீடும் மற்றும் அதைச்சேர்ந்தவைகளும் கிழக்கு ரோட்டு வடக்கு கையொழுங்கையும் K சோமசுந்தரத்தினதும் அவர் மனைவி செல்லம்மாவினதும் ஆதனங்கள். மேற்கு இங்கே கீழ் கூறப்படும் இரண்டாம் துண்டுக்காணி. தெற்கு சின்னக்குட்டி இரத்தினசபாபதியின் ஆதனம். இது அடக்கலும்.

(2) வண்ணார்பண்ணை தென்மேற்கில்உள்ள 'திருவலறத்திடலும் சிமான்றிடலும் எனக் கூறப்படும் முதலாம் துண்டுக்காணியை குறிக்கும் அளவுப்படம் நிலப் பரப்பு (2) குளி 9, 4/10 ம் கல் வீடும் மேற்கு எல்லைக் காணியில் உள்ள கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலும் உரிமையும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் கிழக்கு முதற் துண்டுக்காணியும் இரத்தினசபாபதிக்கு உரிய 3 எனக் குறிக்கப்பட்ட துண்டுக்காணியும். இக் காணியில் பொதுப் போக்குவரத்துக்கு என நியமிக்கப்பட்ட 4 எனக் குறிக்கப்பட்ட துண்டுக் காணியும் வடக்கு K. சோமசுந்தரத்தினதும் அவர் மனைவி செல்லம்மாவினதும் மேற்கு அம்பலவாணரின் கைம் பெண் பொன்னம்மாவினதும் அதைச் சேர்ந்த மறுபேர்களும் தெற்கு கணபதிப்பிள்ளை துரையப்பாவினதும் மறு பேர்களின் ஆதனம். இது அடங்கலும், மேலும் இத்துடன் படத்தில் குறிக்கப்பட்ட 4ம் துண்டுக் காணியில் அரைப் பங்கும்.

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

அராலி வடக்கு
வட்டுக்கோட்டை. 2-5-71
எம். 45 14-5-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அலிஸ் இரத்தினம்மா WW/O ஜெபரத்தினம் சாள்ஸ் ஜோசேப் கோண்டாவில் யாழ்ப்பாணம் —வழக்காளி.

வழ. இல: M. B. 11697 எதிராக

முருகேசு சிவசம்பு கோண்டாவில் யாழ்ப்பாணம் — எதிராளி

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் M. B 11697-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971-ம் ஆண்டு ஆனி மாதம் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2376/-ம் 16-5-70 தொடக்கம் 10-9-70 வரைக்கும் ரூபா 1200-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 266-72

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பிரிவும் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவிலில் இருக்கும் காணி 'வளையவளவு' நிலப்பரப்பு இரண்டு (2) குழி 11, 1/32 இதிற் விற்ற 16 குழி நீக்கி மிகுதியாக இருக்கும் நிலப்பரப்பு ஒன்று குழி 13, 1/32ம் அழகாண்டி வளையவளவு நிலப்பரப்பு ஒன்றும், இரண்டுமாகச் சேர்ந்து நிலப்பரப்பு இரண்டும். குழி 13, 1/32ம், வடக்குப்பக்க கிணற்றிலும் தெற்குப் பக்க கிணற்றிலும், பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். மேற்சொல்லிய நிலப்பரப்பு 2 குழி 13, 1/32 எல்லை கிழக்கும், தெற்கும் ஒழுங்கை. வடக்கு மார்க்கண்டு செல்லையாவின் ஆதனம், மேற்கு அம்பலவி கதிரவேலுவின் ஆதனம் இதடங்கலும். பதிவு இல: D 278/9

"வேல் பதி"
புத்தூர்.
30 4 71

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 41 14—5—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

Bank of Ceyon having its head office in fort in Colombo and branch office at No 476 and 476 A, Hospital Road Road, Jaffna —வழக்காளி

வழ. இல: M B 9574 எதிராக

1 கணபதிப்பிள்ளை சமுவேல் குமாரசாமி
2 குமாரசாமி சமுவேல் திசைராசாவும் மனைவியும்
3 பண்டிதநாயகி திசைராசா எல்லோரும், நெடுந்தீவு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9574-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971ம் ஷூ ஆனிமீ 23-ந் திகதி (23-6-71) புதன்கிழமை முற்பகல் 11-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3768-71ம், 31-10-67 தொடக்கம் 12-5-69 வரைக்கும் ரூபாய் 3768-71க்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 447-71

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி நெடுந்தீவுக் கோவிற்பற்று நெடுந்தீவு கிழக்கு இறை 'வளையம்பிட்டி' என்னும் காணி 4 ஏக்கர் 28 பேச்சேஸ் உலாந்தா W. O S. Ingkes. அனுமதிக்கப்பட்ட பட இல: 326241, 21-7-1917 இல் அளக்கப்பட்டது. பின்னால் 15—9—61 இல் உத்தரவு உலாந்தா ஏகாம்பரத்தால் அளக்கப்பட்ட ஆதன இலக்கம் 150A. எல்லை கிழக்கு ரோட்டுக்கு விலக்கப்பட்ட ஆதனம், வடக்கும் மேற்கும் அவ்வூர் வாசிகளுக்குரிய ஆதனம், தெற்கு அரசாங்கத்துக்குரிய ஆதனம். பதிவு இலக்கம்: C 340/186

நம் 35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

இ. கனகரத்தினம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
எம், 47 14-5

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 8412

புன்னாலைக்கட்டுவன், கதிரிப்பிள்ளை நாகலிங்கம் —வழக்காளி

எதிராக

ஊரெழு (1) இளையதம்பி வேலுப்பிள்ளையும் பெண்
(2) இருசசெல்வமும்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8412-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1971 ம் ஆ. ஆனி மீ மாதம் 26-ம் திகதி [26-6-71] சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 8164/- இதில் ரூபா 5000/-க்கும் 26-8-66 தொடக்கம் 21-9-67 வரைக்கும் 100க்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 444-55

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை 'உலர்த்தவளை' (Ulaththavalai) பர. நி. லா. (40) நாற்பதும் இணையும் தென்னைகளும். எல்லை கிழக்கு கதிரவேலும் வேரம்பலத்துக்கும் சகாரத்தினத்தின் உரிமைக்காரினுதனங்கள், வடக்கு காடு மேற்கு ஒழுங்கை, தெற்கு சோமசுந்தரம் மகாதேவலினுதனம். இதடங்கலும்.

2 ஷெ ஏழாலையும் சீராவத்தை இறை "உலர்த்தவளையும் குருட்டுநீலன்காடும் மறுபிரிவுகளும் (Uluththavali Kuruddu neelankadu) பர. நி. லா. 14 குளிகள் 16ம் கிணறும், கல்வீட்டுக் கட்டடமும். செய்பயிர்களும் எல்லை கிழக்கு சதாசிவக்குருக்கள் கைம்பெண் வள்ளியம்மைக்கும் கதிரவேலு வேரம்பலத்துக்குமுரிய ஆதனங்கள். வடக்கு சோமசுந்தரம் மகாதேவனுக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ரோட்டு இதடங்கலில் மிகுதியாகவுள்ள வடக்கெல்லையின் காணிக்கு சொந்தமாகப் பாவிப்பதற்கு இவ்வெல்லைக்குள் இருக்கும கிணற்றில் பங்கும் இறைவாய்க்கால் வழிபாவிப்புரித்தும் பிறநீங்கல்

3. ஷெ வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று. ஊரெழு இறை 'மலையாளசீமா' பர. நி. லா ஆறும் மனைகளும், வடலிகளும் எல்லை கிழக்கு ஐயம்பிள்ளை பெண் இலட்சுமியினுதனம். வடக்கு ஒழுங்கையும், கனகரத்தினம் பஞ்சரத்தினத்தினுதனம். மேற்கு ஒழுங்கை, தெற்கு சுப்பிரமணியம் பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளர்க்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

இல. 24, முதலாம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 25-4-71,

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 44 14-5-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 11204

1. தம்பு செல்வரத்தினம் பெண்
2. அன்னலெட்சுமி இருவரும் கனகசபை வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு. யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

1. வேலுப்பிள்ளை கந்தையாவும் பெண்
2. கனகம்மா இருவரும், கனகசபை வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு. யாழ்ப்பாணம், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11204ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ஆம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி (7-6-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 9,695/-ம். 20-10-69 தொடக்கம் 28-6-70 வரைக்கும் ரூபா 7,000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 419/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கிறை "கூவியவளவு" இதன் நிலப்பரப்பு $1\frac{1}{2}$ம், புதிதாகக் கட்டப்பட்ட கல் வீடும், குசினியும் இக்காணிக்குக் கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைப்பங்கும். எல்லைகிழக்கு சின்னையா இரத்தினத்திற்குரிய ஆதனம். வடக்கு கந்தையா பெண் கனகம்மாவின் உரிமையாளர்களின் ஆதனம், வயிரமுத்து கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனமும், மருதையினார் சுப்பையாவின் ஆதனமும். மேற்கு சடையர் இராசையாவின் கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 27-4-71
எம் 48 14—5—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
றிக்குசெற் கோட்டில்

வழ. இல. 6080 A

வேலணை கிழக்கு இராமர் செல்லத்துரை — வழக்காளி

எதிராக

1. வேலணை கிழக்கு கணபதி சபாரத்தினமும் பெண்
2 மனோன்மணியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் றிக்குவெசெற் கோட்டின் 6080 / A-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1971-ம் ஷூ ஜூன் (ஆனி) மீ 24-ஆம் திகதி (24-6-71) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 612/- இதில் ரூபா 300/-க்கும் 7-10-68 தொடக்கம் 17-2-69 வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் 17-2-69 தொடக்கம் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய்

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோயிற்பற்று வேலணை கிழக்கிறை செம்மான்காடு பர. நில. 9 குளிகள் $4\frac{1}{2}$ யும் பனைகள் வடலிகளும் தென்னைகளும் வேம்பும் வீடும் குசினியும்கிணறும் ஆனால் தற்போதைய அளவின்படி பர. நில 6 குளி 6ம் இதில் நடுவே பர. நில 2ம் நடுவே யிருக்கும் பர நில 2 க்கும் எல்லை கிழக்கு மாதன் மாரிமுத்து பெண் சரஸ்வதியினுதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு சின்னர் சுப்பிரமணியம் பெண் இராசத்துக்குரியஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் கமலத்துக்கும் பங்காளருக்குரிய ஆதனம்.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
24-ஆம் நம்பர்
1-ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 5-5-71
எம். 50 14-5-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 11065

வேலாயுதர் பெருமையினார் கைம்பெண் சுந்தரம்மா தத்துவகாரியாகிய வழக்கு இலக்கம்: 2103 T. D. C. யாழ்ப்பாணம். வழக்காளி

எதிராக

நாகலிங்க ஐயர் தியாகராசக் குருக்கள்; நெடுந்தீவு மேற்கு நெடுந்தீவு. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11065-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணி 1971-ம் ஆ. ஆனி மீ 23-ம் உ (23-6-71) புதன்கிழமை பிற்பகல் 1-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 1000/ ம், 24—8—69 தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 219-43

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவு கோவிற்பற்று நெடுந்தீவு இறை 'பூவரசடியிற் தோட்டம்' கி. ப. 20ம், பூவரசடியிற்தோட்டடைப்பு' கி. ப. 18 இது இரண்டும் சேர்ந்து கி. ப. 38ம் வீடும், கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ரோட்டும், மூத்தவர் கணபதியும் பங்காளரும், வடக்கு மூத்தவர் கணபதியும் பங்காளரும். மேற்கு கணபதிப்பிள்ளை சிவகாமி அம்மா தெற்கு ஆறுமுகம் வயித்திலிங்கமும் பங்காளரும், இதில் பிரிக்கப்படாத அரைப் பங்கு. வீட்டிற்கு பங்கு இல்லை.

இ. கனகரத்தினம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
35/2. கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

**வழ. இலக்கம்: M. B. 10008.**

சுன்ணுகம், உடுவில் வைத்திலிங்கம் செல்லையா
— வழக்காளி

எதிராக

அச்சுவேலி தெற்கு பொன்னையா வாதவூரன்
— எதிராளி

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10008-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் பதின்மூன்று துண்டுக் காணிகள் என்னல் 1971-ம் ஹூ ஆனிமீ 23-ஆம் திகதி புதன்கிழமை (23-6-71) முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.**

**தீர்வைத்தொகை:** முதல் வட்டி ரூபாய் 10,000/-மும் ரூபாய் 8000/-க்கு 27—5—1968 தொடக்கம் 7—12—1968 வரைக்கும் 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 352—12 சதம்

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி தெற்கிறை "பெரும் புலம்" பர. நி. இலா. பதின்மூன்று (பர. நி. இலா. 13 எல்லை கிழக்கும், வடக்கும் பொன்னையா மகள் கவுரிக்கும் பங்காளர்கட்குமுரிய ஆதனம், மேற்கு வேலாயுதர் ஆறுமுகத்திற்கும் பங்காளர்கட்குமுரிய ஆதனம், தெற்கு ரேட்டும், பொன்னையா மகள் கவுரிக்கும் உரிய ஆதனம், இதடங்கலும், இது யாழ்ப்பாணம் காணிக் கந்தோரில் K. 137/180ல பதியப்பட்டது.

2. ஷ அச்சுவேலி தெற்கிறை 'முக்கறையன்தாழ்வு வயல்' பர. நெ. இலா. இருபத்திரண்டு (பர. நெ. இலா. 22) எல்லை கிழக்கு தரவை, வடக்கு தம்பிப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு முதலி நாச்சன் பெண் சின்னனுக்குரிய ஆதனம், தெற்கு வயிரமுத்து சரவணமுத்துவிற்குரிய ஆதனம, இதடங்கலும், பதிவு K 137/181

3. ஷ அச்சுவேலி தெற்கிறை 'பள்ளகலட்டியும் பயத்தங் கலட்டியும்' பர. நி. இலா. ஐந்து குளி மூன்றுடன் மூன்றிலெட்டு (பர. நி. இலா 5. குளி 3, 3/8) கிணறும், செய்பயி வான்பயிர்களும், வடக்கெல்லையிலிருக்கும பத்தரை முழம் நீளம கொண்ட துண்டும், கிணறும், கிழக்கெல்லையிலிருக்கும் கிணறும், எல்லை கிழக்கு சின்னன் சிவலைக் குரியவாதனம், வடக்கு சின்னவன் சிவலைக்கும மறுபேருக்குமுரிய ஆதனம மேற்கும், தெற்கும் அரியபுத்திரர் மகள் மனோன்மணிக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம இதடங்கலும, இதன் பதிவு யாழ்ப்பாணம் K. 137/182

4. ஷ அச்சுவேலி தெற்கிறை 'நொன்னயன்து' பர. நெ, இலா. பதினைந்து (பர. நெ. இலா. 15) வடலிகளும், எல்லை கிழக்கு சிதம்பரம் பெண் சின்னுச்சிக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம, வடக்கு தரவை, மேற்கும், தெற்கும், வல்லிபுரம் பெண் மாணிக்கத்திற்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம, இதிற் சொரியலாயரைவாசி இதன்பதிவு யாழ்ப்பாணம் K. 200/102

5. ஷ அச்சுவேலி தெற்கிறை 'வன்னசீமா' பர. நி. இலா. ஐந்து குளி ஆறு (பர. நெ. இலா. 5 குளி 6) எல்லை கிழக்கும் மேற்கும தெற்கும் ஒழுங்கை, வடக்கு செல்லமுத்து பெண் மீனுட்சிக்குரிய வாதனம், இதிற் சொரியலாய் 1/8 பாகம். பதிவு யாழ்ப்பாணம் K. 200/103ம், 271/51ம

6. ஷ அச்சுவேலி தெற்கிறை 'தச்சன் சீமா' நி. பர. மூன்று. (நி, பர. 3) வீடுகளும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும எல்லை கிழக்கு குட்டியன் இராமனுக்கும பங்காளர்கட்குமுரிய ஆதனம், வடக்கு வயிரமுத்து சரவணமுத்துவிற்குரிய வாதனம், மேற்கு சிவசரணம் பெண் பொன்னுபரணத்திற்குரிய வாதனமும், ஒழுங்கையும், தெற்கு ஒழுங்கை இதிற் சொரியலாய் 5/8 பாகம் இதன் பதிவு யாழ்ப்பாணம K 196/69

7. ஷ அச்சுவேலி தெற்கிறை 'ஆனைவிழுந்தான்' பர. நி இலா: பதினைந்தரை (பர நி. இலா 15½) எல்லை கிழக்கு வல்லிபுரம் ஆறுமுகத்திற்கும் மறுபேர்கட்குமுரியவாதனங்கள், வடக்கு வல்லிபுரம் மகள் வயிரவியாளுக்குரியவாதனம், மேற்கு குழந்தைவேலு கனகசபைக்குரிய வாதனம், தெற்கு முருகேசு கந்தையாவிற்குரியவாதனம், இதிற் சொரியலாய் 5/8 பாகம் இதன் பதிவு யாழ்ப்பாணம் .K 188/23

8. ... ... ... ... ... ...

9. ஷ அச்சுவேலி தெற்கிறை 'செம்பியன்வயல்' பர. நெ. இலா. பதினேழுடன் பதினறில் பதினைந்து (பர. நெ. இலா. 17, 15/16) எல்லை கிழக்கு வேலாயுதபிள்ளை கணபதிப்பிள்ளைக்கும் பங்காளாகட்குமுரிய வாதனம், வடக்கு வெள்ள வாய்க்கால். மேற்கு, நாகன் தம்பனுக்கும் மறுபேர்கட்குமுரிய ஆதனம், தெற்கு சண்முகம் கனகருக்கும் மறுபேர்கட்குமுரிய வாதனங்கள, இதிற் சொரியலாய் 5/32 பாகம் பதிவு யாழ்ப்பாணம். K 188/25

10. ஷ அச்சுவேலி தெற்கிறை 'பெரும்புலம்' பர. நி. இலா. ஒன்பது குளி பதினலே முக்கால் கிணற்றுப் பாகமும், எல்லை கிழக்கு பொன்னையா மகள் கவுரிக்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம், வடக்கு

### பள்ளிக்கூடங்களைத் திறத்தல்

பயங்கரவாதிகளினல் சேதம் உண்டாக்கப்பட்ட பள்ளிக்கூடங்களும் பாதுகாப்புப் படையினருடைய வசிப்பிடமாகவுள்ள பள்ளிக்கூடங்களும் தவிர ஏனைய பள்ளிக்கூடங்கள் இம்மாதத்தில் திறக்கப்படுமெனத்தெரிய வருகின்றது. வட்டாரவித்தியாதிகாரிகளது, பள்ளிக்கூடங்களின் தலைமையாசிரியர்களதும் கருத்துக்களை ஆராய்ந்த பின்புதான் பள்ளிக்கூடங்கள் ஆரம்பமாகும் திகதி நியமிக்கப்படும்.

### வேலணையில் பனம்பொருள் கண்காட்சி

வேலணை இளைஞர் விவசாயக் கழகமும், வேலணை கிழக்கு விவசாய உத்தியோகஸ்த்தர் திரு வி. ஐயாத்துரையும் பனம்பொருள் கண்காட்சியொன்றினை இம் மாத முடிவில் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டைகிழக்கு சிதம்பரப்பிள்ளை செல்லப்பா
கைம்பெண் நாகம்மா — வழக்காளி

இல. M B 10303 எதிராக

வட்டுக்கோட்டை கிழக்கு (1) அம்பலவாணர் மூத்தையாவும்
(2) பெண் பத்மாவதியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10303 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணும் மூன்று துண்டுக் காணிகளை 1971-ம் ஆண்டு யூன் (ஆனி) மீ 14-ம் திகதி (14—6—71) திங்கள்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 4916-25 இன்னும் ரூபா 3000/-க்கு 19-9-68 தொடக்கம் 15-7 69 வரை 7 வீத வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 315-90 இதில் கொடுபட்ட ரூபா 2240/- கழிபடவேண்டும்.

### ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டைக் கோயிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறைநானியவத்தை பர வில பத்தும் கிணறும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு கை ஒழுங்கை. வடக்கு முருகேசு கைம்பெண் சிவபாக்கியத்தினுதனம் இந்தெல்லைப்படி இதடங்கலும்.

2. ஷ இறை 'கமரவிளக்கை' பர நெ ஏழும் கிணறுப்பங்கும் எல்லை கிழக்கு முதலியார் பெண் பத்மாவதியினுதனம். வடக்கு அம்பலவாணர் செல்வத்துரையினுரிமைக்காரரினுதனம். மேற்கு வயித்தீஸ்வரன் கோயிலாதனம். தெற்கு சபாபதி இராசையாவினுதனம், இந்தெல்லைப்படி இதடங்கலும்.

3 ஷ இறை 'கமரவிளக்கை' பர. நெ பதின்மூன்றும் கிணற்றுப்பங்கும் பனைகளும் எல்லை கிழக்கு வயிரவநாதர் சிற்றம்பலத்தினுதனம். வடக்கு பொன்னையா வேலுப்பிள்ளை பெண் மகேஸ்வரியினுதனம் மேற்கு கதிரவேலு சபாரத்தினத்தினுதனம். தெற்கு சந்தமுத்து மாரிமுத்துவினுதனம், இந்தெல்லைப்படி இதடங்கலும்.

**S இரத்தினசபாபதி, J. P**
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

பிரேசன் ரேட்,
கோண்டாவில், 28-4-71
எம். 54 14-5-71

கந்தன் தவசிக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், மேற்கு வேலாயுதர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், தெற்கு பொன்னையா மகள் கவுரிக்குரியவாதனம், இதிற் சொரியலாய் 5/32 பாகம் பதிவு யாழ்ப்பாணம் K. 237/122

11 ஷ அச்சுவேலி தெற்கிறை 'கணுக்கை' பர. நி இலா நாலரை (பர நி. இலா. 4½) கிணற்றுப் பாகமும், வழிவாய்க்காற் பாகமும் எல்லை கிழக்கு நன்னித்தம்பி செல்லப்பாவிற்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம், வடக்கு கந்தையா பெண் பொன்னம்மாவிற்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், மேற்கு ரேட்டு. தெற்கு சுப்பையா தம்பிப்பிள்ளைக்குரியவாதனம், இதிற் சொரியலாய் ¼ பாகம் பதிவு யாழ்ப்பாணம் K. 231/70

12. ஷ அச்சுவேலி தெற்கிறை 'கணுக்கை' பர. நி. இலா இரண்டு குளி ஆறரை (பர. நி இலா 2 குளி 6½) முழுக் காணியின் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பாகமும், வழிவாய்க்காற் பாகமும் எல்லை கிழக்கு வேலாயுதர் செல்லையாவின் உரிமைக்காரர்கட்குரிய ஆதனம், வடக்கு பொன்னையா மகள் கவுரிக்கும் பங்காளர்கட்குமுரிய ஆதனம், மேற்கு ரேட்டு. தெற்கு சுப்பையா பொன்னையாவுக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், இதிற் சொரியலாயரைவாசி பதிவு: யாழ்ப்பாணம். K. 200/106

13. ஷ அச்சுவேலி தெற்கிறை 'பெரும்புலம்' பர நி. இலா, பதினலு (பர. நி. இலா. 14). மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பாகமும் வழிவாய்க்காற் பாகமும் எல்லை கிழக்கு நல்லதம்பி கந்தையாவிற்கும் பங்காளர்கட்குமுரியவாதனங்கள், வடக்கும், மேற்கும் தெற்கும் பொன்னையா மகள் கவுரிக்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம், இதிற சொரியலாயரைவாசி பதிவு: யாழ்ப்பாணம் K 200/106

14. ஷ அச்சுவேலி தெற்கிறை 'புதியார்காடு' பர. நெ இலா. பத்தரை (பர நெ. இலா. 10½) எல்லை கிழக்கு வரித்தம்பி அருமையரின் உரிமைக்காரர்கட்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், வடக்கு சீனியன் கந்தனுக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம். மேற்கு கந்தையா மயில்வாகனத்திற்குரியவாதனம், தெற்கு கணபதிப்பிள்ளை பெண் மீனுட்சிப்பிள்ளைக்குரியவாதனம், இதிற் சொரியலாயரைவாசி பதிவு யாழ்ப்பாணம் K. 231/71

**வை ஏரம்பமூர்த்தி**
கோம்மிஷர் & விலைமதிப்பாளர்.

1971ம் ஹூ வைகாசிமீ
12ம் திகதி (12-5-71)
காரைநகர்.

M. 52 14-5

**வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 14—5—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## வழிகாட்டும்கழகம்!



பக்தர்: "பனம் பொருள் கண்காட்சி யொன்றினை இம்மாத முடிவுக்குள் நடாத்துவதுஎன்று வேலணை இளைஞர் விவசாயக் கழகம்முடிவுசெய்துள்ளதாம்"!

சித்தர்: "ரொம்ப நல்லகாரியம் பாருங்க; பயனுள்ளபணி இது; ஈழமெங்குமே இக்கண்காட்சியை நடாத்தவேண்டும்; 'பனம் பொருட்களின்நவீன உற்பத்தி', 'பனம் விதைகளை நாட்டுதல்' போன்ற ஆக்க வேலைகளில் அனைவரும்ஈடுபட்டுழைக்கமுன் வரவேண்டும்! வேலணைவிவசாயக்கழகம் வழிகாட்டியாய் விளங்குகிறது' என்று கூறுங்களேன்! கழக ஊழியர்களே! சபாஷ்! சபாஷ்! சபாஷ்!"

"நாயன்மார் - நாதன்"

### ஐ நா கல்வி விஞ்ஞானச் சஞ்சிகை

#### சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர்

ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசாரத் தாபனத்தின் (யு என். எஸ். கோ) மாதாந்தச் சஞ்சிகையான 'கூரியர்' நிர்வாக ஆசிரியர்கள் கூட்டம் பாரிஸ் நகரில் நடைபெற்றபொழுது ஷ சஞ்சிகையின் தமிழ்ப் பிரசுரத்தின் ஆசிரியரான சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்களும் சமுகமளித்திருந்தனர்.

—::—

### பொன்னுலை, வரதராஜப்பெருமாள் கோவிலில்

மேற்படி கோவிலில் சனீசுவரன் இடமாற்றத்தினல் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் நோக்கமாக அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் ஏகதின இலட்சார்ச்சனை நடைபெறும்.

### சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை மூன்றும்பனை வைரவர் கோவிலில் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. இந் நிகழ்ச்சியின் பின்பு மாகேசுவர பூசையும் மேளக் கச்சேரியும் கதாப் பிரசங்கமும் நிகழும்.

### இலவச பத்திரம்

—::—

"நன்மைசெய்; நல்லவனய் இரு; பிறர்படும் துயர்தனை உனதெனக் கருது; அன்பே சிவமென்பதை உணர்; மனச்சாட்சிப்படி என்றும் நடந்துகொள்; இயன்றவரையில் தொண்டு செய்; ஒன்றுபட்டால்உண்டுவாழ்வு என்பதை மறவாதே! ஒவ்வொருவருக்கும் தத்தம் சமயம் புனிதமானது-மேலானது-நல்வழிப்படுத்துவது என்பதைச் சிந்தையிற்கொள்; மக்கள் தொண்டே மகேசுவரன் தொண்டென்பதையுணர்ந்து வாழ்க்கையை அதற்கேற்ப அமைத்துக்கொள்; இறைதியானத்தை எந்நேரமும் வைத்துக்கொள்; நாமபசனை உளத் தூய்மையை நல்கும்" என்பன போன்ற அரியகருத்துக்கள் பொதிந்த துண்டுப் பத்திரமொன்று (5 ஆம்) இலவச வெளியீடாக வெளிவந்துள்ளது இதுபற்றிய விபரங்கள் கிடைக்குமிடம்: சோழபுரம் சிவசாமி [வேற்படை] ஹிங்குறக்கொட, இலங்கை.